# தெள்ளூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை: திருமதி.சு.தேவி

ந.க.எண்.01/2023 நாள்.16.10.2023

பொருள்: மனைப்பிரிவு – வேலூர் மாவட்டம் – வேலூர் ஊராட்சி ஒன்றியம் தெள்ளூர் கிராம புன்செய் சர்வே எண். 325/11 ல் 0.82 ஏக்கர் (3300 ச.மீ) பரப்பளவில் அமைந்துள்ள புதிய மனைப்பிரிவுகள் – மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களால் தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் அங்கீகரிக்கப்பட்டது கிராம ஊராட்சி இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடுதல் – சார்பு.

பார்வை: (1) இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், வேலூர் அவர்களின் கடிதம் ந.க.எண். VLR/3222V6PJ/088/2023/TCP. நாள்.16.10.2023.

(2) திரு. தாமஸ் மற்றும் இருவர், வேலூர் என்பவரது விண்ணப்பம் நாள்.14.02.2024.

(3) தெள்ளூர் கிராம ஊராட்சி மன்ற தீர்மானம் எண்.80 நாள்.19.02.2024.

(4) நிலப்பயன் மாற்றக் கட்டணம் ரூ.1,13,063/– அரசு தலைப்பில் செலுத்தப்பட்ட சலான் எண். 20240215012658 . நாள்.15.02.2024.

(5) தெள்ளூர் கிராம ஊராட்சி கூராய்வுக் கட்டணம் ரூ.21,000/– செலுத்தப்பட்ட பல்வகை ரசீது எண்.1916 . நாள்.19.02.2024.

(6) தெள்ளூர் ஊராட்சி வளர்ச்சி கட்டணம் ரூ.1,000/– செலுத்தப்பட்ட பல்வகை ரசீது எண்.1917 . நாள்.19.02.2024.

**உத்தரவு:**

வேலூர் மாவட்டம், வேலூர் ஊராட்சி ஒன்றியம், தெள்ளூர் கிராம ஊராட்சி புன்செய் சர்வே எண்325/11 ல் 0.82 ஏக்கர் (3300 ச.மீ) பரப்பளவில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை (1)ல வேலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களால் தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் ம.வ./மா.ந.ஊ.அ.(வே.மா.) எண். 88/2023 அங்கீகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மேற்படி புதிய மனைப்பிரிவில் அமைந்துள்ள 1 முதல் 21 வரையிலான குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு தெள்ளூர் ஊராட்சி மன்றத்தால் இறுதி ஒப்புதல் அளிக்க வேண்டி வரப்பெற்ற கருத்துரு பரிசீலனை செய்யப்பட்டது.

மேற்படி புதிய குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலை மற்றும் மூலை முடக்கு 935.70 ச.மீ மற்றும் TANGEDCO ஒதுக்கீடு (மின்மாற்றி அமைவிடம்) 15.00 ச.மீ பொது உபயோகம் 15.70 ச.மீ ஆகியவை தெள்ளூர் ஊராட்சி மன்றத்திற்கு தானபத்திரம் மூலம் ஆவன எண். 10871/2023, நாள்.12/10/2023 அன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது. 10% பூங்கா பொது ஒதுக்கீட்டிற்கு ஈடாக அரசின் வழிகாட்டி மதிப்பீட்டு கட்டணம் ரூ.,1.14,602/–(சலான்

எண்.2023101615309. நாள் 16.10.2023 அன்று அரசு தலைப்பில் இணையதளத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி புதிய குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அரசாணை (நிலை) எண்.134, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ஊ.வ. 71 த் துறை, நாள்.16.06.2003ன்படி நிலப்பயன் மாற்றக் கட்டணமாக ரூ.1,13,063/– அரசுத் தலைப்பில் (சலான் எண்.20240215012658. நாள்.15.02.2024) செலுத்தப்பட்டுள்ளது. மேலும், கூராய்வுக்கட்டணம் ரூ.21,000/– தெள்ளூர் கிராம ஊராட்சி பல்வகை ரசீது எண். 1916 –ன்படி செலுத்தப்பட்டதால் தெள்ளூர் ஊராட்சி மன்றத்தால் தீர்மானம் (தீர்மானம் எண்.80 நாள். 19.02.2024) நிறைவேற்றப்பட்டு, தெள்ளூர் கிராம ஊராட்சியால் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

இணைப்பு: மேற்குறிப்பிட்டுள்ளவாறு

தலைவர்
PRESIDENT
தெள்ளூர் ஊராட்சி
Thellur Panchayat,
வேலூர் ஊராட்சி ஒன்றியம்
Vellore Union, Vellore Dist.

பெறுநர்:
திரு. தாமஸ் மற்றும் இருவர்,
வேலூர் மாவட்டம் –632 105.

நகல்: சார் பதிவாளர், ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகம், வேலூர்.
நகல்: இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், வேலூர்.
நகல்: இயக்குநர், நகர் ஊரமைப்பு இயக்கம், சென்னை.
நகல்: ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), வேலூர்.
நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), வேலூர் ஊராட்சி ஒன்றியம்.